யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம்.
கரவெட்டி.

# பரிசளிப்பு விழா

பிரதம விருந்தினர்

## திரு. க. கந்தசாமி

ஓய்வுபெற்ற மாகாணக் கல்விப் பணிப்பாளர்.
(பழைய மாணவர்)

20.03.2004

# வருடாந்த அறிக்கை

## நிகழ்ச்சி நிரல்

* மங்கள விளக்கேற்றல்
* தேவாரம்
* தமிழ்த்தாய் வாழ்த்து
* வரவேற்புரை
* ஆண்டறிக்கை
* தலைமையுரை
* மாணவர் உரைகள்
* பிரதம விருந்தினர் உரை
* பரிசில் வழங்கல்
* கலை நிகழ்ச்சிகள்
* நன்றியுரை
* பாடசாலைக் கீதம்



# வருடாந்த அறிக்கை

எம்மதிப்பிற்குரிய பிரதம விருந்தினர் அவர்களே! கல்வித் திணைக்கள அதிகாரிகளே! அயற்பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, இவ்வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர்களே, ஆசிரியர்களே எமது பேரன்பிற்குரிய பெற்றோர்களே, பழைய மாணவர்களே, நலன்விரும்பிகளே, எமது மாணவச் செல்வங்களே உங்கள் அனைவருக்கும் எமது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது இந்த பரிசளிப்பு விழாவானது 2003 நவம்பர் 14ம் திகதி நடாத்த திட்டமிடப்பட்டிருந்தது. 5ம் தர புலமைப் பரிசில் பரீட்சை உரிய காலத்தில் நடைபெறாத காரணத்தால் காலந் தாழ்த்தி இன்று நடைபெறுகின்றது.

பரிசளிப்பு விழா இதற்கு முன் 21.10.2002 இல் இவ் வித்தியாலயத்தின் நூற்றாண்டு நிறைவு நிகழ்வாக சிறப்பாக நடைபெற்றது அனைவரும் அறிந்ததே. இந் நிகழ்வில் எமது பழைய மாணவரான பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் கலந்து சிறப்பித்தது எமது பாடசாலைச் சமூகத்திற்கு கௌரவத்திற்குரியதாக இருந்தது.

அதேபோன்று இன்றைய நிகழ்விற்கு இப்பாடசாலையின் பழைய மாணவரும், முன்னைய மாகாணகல்விப் பணிப்பாளரும், 'கல்வி நிர்வாகம் என்பது மாணவரின் கல்வி அடைவிலே தான் தங்கியுள்ளது' என வடக்கு கிழக்கெங்கும் தனது முத்திரை பதித்த எமது ஊரைச் சேர்ந்த உயர்திரு க.கந்தசாமி அவர்கள் கலந்து சிறப்பித்துக் கொண்டிருப்பது எமக்கு பெரும் மனநிறைவைத் தருகின்றது. அதேபோன்று வித்தியாலயத் தாயும், கரவைச் சமூகமும் பெருமை கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

கல்வி முகாமைத்துவத்தில் சிறப்பு பெற்ற எமது பழைய மாணவரின் முன் இவ் அறிக்கையை சமர்ப்பிப்பதில் பெருமை அடைகின்றேன்.

மாணவர் தொகை :-

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 01 | 19 | 18 | 37 |
| 02 | 24 | 25 | 49 |
| 03 | 27 | 28 | 55 |
| 04 | 38 | 30 | 68 |
| 05 | 30 | 23 | 53 |
| மொத்தம் | 138 | 124 | 262 |

ஆளணி விபரம் :-

அதிபர் - திரு. இ.இராகவன்.

ஆசிரியர்கள் - செல்வி. வி.சுப்பிரமணியம்.
திருமதி. நே.யோகலிங்கம்.
செல்வி. ஆ.கந்தசாமி.
திருமதி. சு.மகேஸ்வரன்.
திருமதி. ஜெ.தேவநேசன்.
திருமதி. மா.துரைசிங்கம்.
திருமதி. கி.புவனேந்திரம்.
திருமதி. பு.சேகர்.

தொண்டர்ஆசிரியர்கள் - செல்வி. சாந்தி நடராசா.
செல்வி. அனுஷா முருகேசு.
செல்வி. உமாகிரி ஜெயாத்துரை.

ஆகியோர் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

இடமாற்றம் :-

திருமதி மங்களேஸ்வரி உதயகுமாரன் 15.02.2004 ல் இருந்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

**கல்வி நடவடிக்கைகளும் பெறுபேறுகளும்.**

**புலமைப்பரிசில் பரீட்சை 2003 :-**

| தோற்றியோர் | சித்திபெற்றோர் | சித்திவீதம் |
|---|---|---|
| 48 | 10 | 21% |

**தமிழ்த்தினப் போட்டி 2003 :-**

கோட்டமட்டத்தில் 7 போட்டிகளில் பங்குபற்றிய நாம் 6 போட்டிகளில் தெரிவு செய்யப்பட்டு வலய மட்டப் போட்டிகளில் பங்குபற்றி; வலயமட்டத்தில்

முதலாம் இடம் :- 01 போட்டி
இரண்டாம் இடம் :- 03 போட்டிகள்
மூன்றாம் இடம் :- 01 போட்டி

என்ற வகையில் மாணவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தினார்கள். இது எமக்கு பெருமகிழ்ச்சியைத் தந்தது. இவற்றிற்குப் பொறுப்பாக திருமதி. ம.உதயகுமாரன் செயற்பட்டிருந்தார். ஒவ்வொரு போட்டியையும் ஒவ்வொரு ஆசிரியர்கள் பொறுப்பேற்று சிறப்பாக வழிநடத்தியமையுடன் சிறந்த பெறுபேறுகளையும் பெற்றமை எமது ஆசிரியர் குழாமின் சிறப்பை பெருமைப்படுத்துகின்றது.

மாவட்ட மட்டப் போட்டியில் பேச்சு நிகழ்வில் பங்குபற்றிய மாணவி செல்வி.கு.பிரியந்தி மூன்றாம் இடத்தை பெற்றுக் கொண்டார்.

இவ்வேளையில் தமிழ்த்தினப்போட்டியில் எமது நடன நிகழ்வுகளிற்கு பெரும் உதவி புரிந்த வடமத்திய மகளிர் கல்லூரி நடன ஆசிரியர் செல்வி பே.சிவகுரு, சங்கீத ஆசிரியர் திருமதி ப.ஜெகதீஸ்வரன் ஆகியோருக்கு நன்றி செலுத்த நாம் கடமைப் பட்டுள்ளோம்.

**ஆங்கில தினப் போட்டி :-**

கிராமப்புறப் பாடசாலையான எமது பாடசாலை மாணவரின் ஆங்கில ஆற்றல் சிறிது குறைவென்றாலும் வடமராட்சி வலய ஆங்கில தினப் போட்டிகளில் கலந்து கொண்டு ஆங்கில குழுப்பாடல் நிகழ்வு வலய மட்டத்திற்கும், நாடகம் மாவட்ட மட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட்டு போட்டிகளில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

**ஆங்கில வகுப்புக்கள் :-**

ஆங்கில அறிவை மேம்படுத்தும் நோக்குடன் வடமராட்சி வலய கல்விப்பணிப்பாளர், ஆங்கில உதவிக் கல்விப்பணிப்பாளர் வழிகாட்டலில் மூன்று வருடங்களாக ஆங்கில வகுப்புக்கள் பிற்பகல் வேளையிலே நடைபெற்று வருவது உங்கள் அனைவருக்கும் தெரியும். ஆங்கிலப் பரீட்சையில் மிகத்திறமையாக சித்தி பெற்ற 89 மாணவர்களின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் 28.09.2003 ல் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.வே.தி.செல்வரட்ணம் அவர்கள் கலந்து சிறப்பித்ததுடன், ஆங்கில வகுப்பிற்கு அனுமதி வழங்கிய கல்விப்பணிப்பாளர், ஆங்கில உதவிக்கல்விப் பணிப்பாளர் அவர்களிற்கு நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இவ் வகுப்பில் திரு இருதயக் கல்லூரியில் நடைபெற்ற முதல் தொகுதி 37 மாணவர்களிற்கும் விரிவுரையாற்றிய

திருமதி. ஜெ.சபாரட்ணம்.

திருமதி. ஜெ.விஜயகுமார்.

அருட்சகோதரி நிரோசா.

ஆகியோருக்கு எமது வித்தியாலய சார்பில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

எமது பாடசாலையில் கல்வியபிலும் 122 மாணவர்களிற்கும் கல்வி கற்பித்துக் கொண்டிருக்கும்

செல்வி.பா.கந்தசாமி (ஆசிரியர் யா/சரஸ்வதி வித்தியாலயம்)

திருமதி.மாதினி அமிர்தலிங்கம்.

செல்வி.ராதிகா சிவசுப்பிரமணியம்.

செல்வி.பா.சுதர்சினி.

ஆகியோருக்கு நாம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம். இவ் வகுப்புக்கள் சிறப்புற நடக்க வழிகாட்டும் எமது பாடசாலை ஆங்கில ஆசிரியர் திருமதி.கி.புவனேந்திரன் அவர்களிற்கு மாணவர், பெற்றோர் சார்பில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இதேவேளை எமது பாடசாலையைச் சேர்ந்த செல்வன் த.கோகுலன் 100 புள்ளி பெற்று தேசிய மட்டத்தில் கொழும்பில் சென்று பரிசில் பெற்று வந்துள்ளார். அவருக்கு எமது பாராட்டுக்கள்

**சைவ பரிபாலனசபைப் பரீட்சை :-**

இப்பரீட்சையில் தரம் 3 மாணவன் செல்வன் த.கோகுலன் வெள்ளிப் பதக்கம் பெற்றுள்ளார்.

**ஓவியப் போட்டி :-**

எமது வித்தியாலய மாணவர் செல்வன் கை.பாலுகோபிகன் அனுப்பிய ஓவியம் தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு பண்டார நாயக்கா சர்வதேச மண்டபத்தில் காட்சிப் படுத்தப்பட்டு அங்கு சென்று பரிசும் பெற்றது பெருமைக்குரியது.

**மாணவர் மன்றம் :-**

எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர் செல்வி ஆனந்தநாயகி கந்தசாமியின் வழிகாட்டலில் மாதாந்தம் இரு தடவைகள் மாணவர்கள் இம்மன்றத்தினூடாக தமது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

**திருவள்ளுவர் தினம் :-**

ஒவ்வோர் ஆண்டும் திருவள்ளுவர் தினத்தை மிகச்சிறப்பாக கொண்டாடி வருகின்றோம். திருவள்ளுவர் பற்றிய பேச்சுக்கள், திருக்குறள் மனனம் ஆகிய போட்டிகள் நடாத்தப்பட்டு வெற்றியீட்டிய 133 மாணவர்களிற்கு எமது கோட்டக்கல்வி அதிகாரி

அம்பலவாணர் அவர்கள் பரிசு வழங்கிக் கௌரவித்தார்கள். இதற்கான பரிசுப் புத்தகங்களை எமது பழைய மாணவர் சங்க உப தலைவர் திரு.ச.செவ்வந்திநாதர் அவர்கள் அன்பளிப்புச் செய்திருந்தார். இவ்வேளையில் அவருக்கு எமது பாராட்டுக்களும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குரு பூசைத்தினம் :-**

நான்கு நாயன்மார்களினதும், ஆறுமுகநாவலர், பாரதியார் ஆகியோர்களினதும் குருபூசைத்தினங்கள் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றன. மாணவர்கள் அத்தினங்களில் பங்குபற்றி உரையாற்றுவதுடன் ஒவ்வொரு ஆசிரியர்களும், வெளியில் இருந்து வரும் பிரமுகர் ஒருவரும் உரையாற்றுவார்கள்.

**ஆசிரியர் நலன்புரிச்சங்கம் :-**

எமது வித்தியாலயத்தின் ஆசிரியர் நலன் புரிச்சங்கமானது வித்தியாலயத்தில் சிறிய சிற்றுண்டிச்சாலையை இயக்கிவருகிறது. அதன் மூலம் கிடைக்கும் பணத்தினூடாக பாடசாலையின் மின்சாரக் கட்டணம் செலுத்தப்படுவதோடு கிராமிய வங்கியிலும் சிறு தொகையை மீதப்படுத்தியுள்ளது.

**ஆசிரியர் தினம் :-**

ஆசிரியர் தினத்தை எமது மாணவர் மன்றத்தினூடாக மாணவர்கள் சிறப்பாக கொண்டாடுவர். இம்முறை எமது பாண்டவாத்திய குழுவினரின் அழைப்புடன், மாலைகள் அணிவித்து பரிசுப்பொருட்கள் வழங்கி, கலைநிகழ்வுகள் நடாத்தி ஆசிரியர்களை கௌரவித்தார்கள். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கோட்டக் கல்விப்பணிப்பாளர் அவர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

**மெய்வன்மைப் போட்டி :-**

பெற்றோர் மாணவர் ஒத்துழைப்புடன் மிகச்சிறப்பாக வருடந் தோறும் நடைபெறுகின்றது. 2003.02.15 நடந்த மெய்வன்மைப் போட்டிக்கு எமது பிரதேச செயலர் திரு.க.கனகரட்ணம் அவர்களும், 2004.01.31ல் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிக்கு தொழிலதிபர் திரு.வ.சிவசூரியகுமாரன் அவர்களும் பிரதம விருந்தினராக கலந்து

சிறப்பித்தனர். இவர்கள் எமது பழைய மாணவர்கள் என்பது எமக்கு பெருமைக்குரிய விடயமாகும்.

மாணவர்த் தலைவர்கள் :-

25 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு சிறப்பாக செயற்பட்டு வருகின்றனர். பாடசாலைச் சுத்தம், பராமரிப்பு, ஒழுங்கு நடவடிக்கைகளில் அவர்களின் செயற்பாடு பாராட்டும் படியாக உள்ளது. அவர்களிற்கு மாணவர் தலைவர் சின்னம் சூட்டும் விழாவில், ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு.க.கமலநாதன் அவர்கள் சிறப்பித்தார்கள்.

## பௌதீகவளச் செயற்பாடுகள் - 2003

2003ல் பல பௌதீக வளச் செயற்பாடுகள் நடைபெற்றிருக் கின்றன.

(1) சுற்றுமதில்.

அமரர் மு.சிவசிதம்பரம் அவர்களின் பன்முகப் படுத்தப்பட்ட நிதியில் இருந்து ரூபா 250,000 இல் 533 அடி சுற்றுமதில் கட்டப்பட்டது.

(2) மின்சாரம்.

எமது பழைய மாணவர்கள் திரு ஆறுமுகம் சிவநாதன், திரு.ஆறுமுகம் சுப்பிரமணியம், திருமதி.ஜெயவதனி தேவநேசன், திரு.க.புவனேந்திரம் ஆகியோரின் அன்பளிப்புடன் 20.01.2003ல் மின்சார வசதி பெறப்பட்டது.

(3) குடிநீர்வசதி.

எமது பாடசாலையில் முக்கிய பிரச்சனையாக இருந்த குடிநீர்வசதியை பழையமாணவரும், கொடைச்சிறப்புடைய வருமான, திரு.வே.சிவகுரியகுமார் அவர்கள் சுமார் ஐந்துலட்சம் செலவில் செய்து தந்திருப்பது காரைச் சமூகத்திற்கு பெருமை சேர்க்கும் ஒன்றாகும். அவரையும் அவர் குடும்பத்தினரையும் எமது பாடசாலைச் சமூகம் என்றும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

(4) புதிய காணியின் நுழைவாயில் கதவு (Gate)

புதிதாக அன்பளிப்பாக பெறப்பட்ட காணியிற்கு 14 அடி அகலமான கேற்றை திருமதி.சி.ரேவதி, திருமதி.செல்லம்மா ஆகியோர் அன்பளிப்பாக வழங்கியிருந்தார்கள்.

(5) பான்ட் :

பாடசாலைக்குத் தேவையான சிறுவர்களுக்கான பான்ட் வாத்தியக் கருவிகளை திருமதி.உ.சிங்காரசா, செல்வி.கிருஷ்ணபிள்ளை தனுசா, திரு.பா.பகீரதன், திரு.த.மகான் ஆகியோர் இணைந்து அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

(6) மலசலகூடம்.

G.T.Z நிறுவன பொருட்களின் உதவியுடனும், பெற்றோர் பங்களிப்புடனும் சுமார் 300,000 செலவில் நவீன மலசல கூடத் தொகுதி கட்டிமுடிக்கப்பட்டு மாணவர் பாவனையில் உள்ளது. G.T.Z நிறுவனத்திற்கும் எமது பாடசாலை சார்பாக நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

(7) மலசல கூடத்திற்கான நீர் வசதி.

இவ் மலசலகூடத்திற்கான நீர்வசதியை சுமார் 1லட்சத்து 30ஆயிரம் ரூபா செலவில் UNICEF நிறுவனம் செய்து தந்துள்ளது.

(8) கிழக்குப்புற மதில்.

இதனை அமைக்க மத்தொனியைச் சேர்ந்த திரு.மார்க்கன்டு சிவபாலன், செல்வி.ந.விதுர்சா ஆகியோர் வழங்கிய அன்பளிப்பு நிதியில் அத்திவாரம் போடப்பட்டு ஒரு பகுதி கட்டப்பட்டுள்ளது. அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன் இம்மதிலை நிறைவு செய்ய விருப்பமுடையவர்களிடம் இருந்து உதவியை எதிர்பார்க்கின்றோம்.

இவ் அபிவிருத்திகள் யாவற்றையும் எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழையமாணவர் சங்கம் ஆகியவற்றினூடாகவே நிறைவேற்றினோம். என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# பாடசாலைக்கு நிறைவேற்ற வேண்டிய தேவைகள்.

1. "சின்னையா வாத்தியார்" பெயரில் நூலக வசதி ஏற்படுத்தல்.
2. கணனி வசதியை ஏற்படுத்தல்.
3. வகுப்பறைகள் அடைக்கப்படல்.
4. நல்ல தம்பி மண்டபத்தை நவீன கலையரங்காக்கல்.

எனது அறிக்கையின் மூலம் பெரும்பாலான அபிவிருத்திப் பணிகள், பெற்றோர், பழைய மாணவர் ஒத்துழைப்புடனேயே மேற்கொள்ளப் பட்டிருப்பது தெரிந்திருக்கும். அதே போன்று இப்பாடசாலையின் பழைய மாணவர்கள், மேற்கூறிய தேவைகளை நிறைவேற்ற உதவிபுரிவார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

இவ்வாண்டிற் பரிசளிப்புவிழா 2003ம் ஆண்டு ஐந்தாம் தர மாணவர்களின் பெற்றோர்களின் உதவியுடன் நடைபெறுகின்றது என்பதைத் தெரிவிப்பதுடன், இங்கு கூடியிருக்கும் அனைவரதும் உதவிகளையும், ஆலோசனைகளையும் என்றும் இவ்வித்தியாலயம் எதிர்பார்க்கிறது என்று கூறி எனது அறிக்கையை நிறைவு செய்கின்றேன்.

-நன்றி

\- அதிபர் -

## 2003 ல் பரிசுக்குரிய மாணவர்களாக தெரிவு செய்யப்பட்ட மாணவர் விபரம்

கூடிய புள்ளிகள் பெற்று பாடரீதியாக பரிசு பெறுவோர் :-

| தொ.இல. | தரம் | பாடம் | பெயர் |
|---|---|---|---|
| 01. | தரம் : 1 | சமயம் | செல்வி.பி.துஷ்யந்தினி. |
| 02. | தரம் : 1 | தமிழ் | செல்வன்.த.கார்த்தீபன். |
| 03. | தரம் : 1 | கணிதம் | செல்வி.ம.துஷிதா. |
| 04. | தரம் : 1 | சுற்றாடல் | செல்வன்.பு.செந்தூரன். |
| 05. | தரம் : 2 | சமயம் | செல்வி.செ.ஊர்மிளா. |
| 06. | தரம் : 2 | தமிழ் | செல்வி.ந.சாமந்தி. |
| 07. | தரம் : 2 | கணிதம் | செல்வி.து.பிரதீகா |
| 08. | தரம் : 2 | சுற்றாடல் | செல்வன்.மு.பாவலன். |
| 09. | தரம் : 3 | சமயம் | செல்வன்.த.பிரவீன். |
| 10. | தரம் : 3 | தமிழ் | செல்வன்.த.கோகுலன். |
| 11. | தரம் : 3 | கணிதம் | செல்வன்.த.கோகுலன். |
| 12. | தரம் : 3 | சுற்றாடல் | செல்வன்.த.கோகுலன். |
| 13. | தரம் : 3 | ஆங்கிலம் | செல்வன்.த.கோகுலன். |
| 14. | தரம் : 4 | சமயம் | செல்வி.சு.கீர்த்தனா. |
| 15. | தரம் : 4 | தமிழ் | செல்வி.ஸ்ரீ.மயூரப்பிரியா. |
| 16. | தரம் : 4 | கணிதம் | செல்வன்.சி.கிருஷ்ணப்பிரதாப். |
| 17. | தரம் : 4 | சுற்றாடல் | செல்வன்.சி.கிருஷ்ணபிரதாப். |
| 18. | தரம் : 4 | ஆங்கிலம் | செல்வன்.சி.கிருஷ்ணபிரதாப். |
| 19. | தரம் : 5 | சமயம் | செல்வி.த.பிரியந்தி. |
| 20. | தரம் : 5 | தமிழ் | செல்வி.த.பிரியந்தி. |
| 21. | தரம் : 5 | கணிதம் | செல்வி.த.பிரியந்தி. |
| 22. | தரம் : 5 | சுற்றாடல் | செல்வி.த.பிரியந்தி.<br>செல்வன்.க.நிஷாந்தன். |
| 23. | தரம் : 5 | ஆங்கிலம் | செல்வி.த.பிரியந்தி. |

## வகுப்பு ரீதியான முதன்மை மாணவர்கள்.

| தொ.இல | தரம் : 1A |
|---|---|
| 24. | செல்வி.ம.துஷிதா. |
| 25. | செல்வன்.க.ஜயரூபன். |
| 26. | செல்வன்.பா.ஹரிகரன். |

| | தரம் : 1B |
|---|---|
| 27. | செல்வன்.டி.செந்தூரன். |
| 28. | செல்வி.கி.ஜெனித்தா. |
| 29. | செல்வி.பி.துஷ்யந்தினி. |

| | தரம் : 2A |
|---|---|
| 30. | செல்வி.கு.பிரதிகா. |
| 31. | செல்வன்.ஜெ.வசீகரன். |
| 32. | செல்வன்.இ.கிரிதர். |

| | தரம் : 2B |
|---|---|
| 33. | செல்வி.பா.லக்ஷனா. |
| 34. | செல்வன்.மு.பாவலன். |
| 35. | செல்வன்.கி.ஜனகன். |

| | தரம் : 3A |
|---|---|
| 36. | செல்வன்.த.கோகுலன். |
| 37. | செல்வன்.க.நிவேதன். |
| 38. | செல்வன்.கி.நிரோஜன். |

| தொ.இல | தரம் : 3B |
|---|---|
| 39. | செல்வன்.த.பிரவீன். |
| 40. | செல்வி.ச.ஜசீதா. |
| 41. | செல்வன்.சி.சதீஸ்வரன். |

| | தரம் : 4A |
|---|---|
| 42. | செல்வன்.கி.கிருஷ்ணபிரதாப். |
| 43. | செல்வன்.க.லக்ஷன். |
| 44. | செல்வி.செ.நிரோசா. |

| | தரம் : 4B |
|---|---|
| 45. | செல்வி.க.வர்ணிகா. |
| 46. | செல்வி.கு.கீர்த்தனா. |
| 47. | செல்வி.ஸ்ரீ.மயூரப்பிரியா. |

| | தரம் : 5A |
|---|---|
| 48. | செல்வன்.கு.கிருஷாந். |
| 49. | செல்வன்.து.துவாரகன். |
| 50. | செல்வி.ம.கலைமதி. |

| | தரம் : 5B |
|---|---|
| 51. | செல்வி.த.பிரியந்தி. |
| 52. | செல்வி.செ.ஞானசௌரி. |
| 53. | செல்வன்.ந.லோகிதன். |

## பாடசாலை மட்டப் போட்டிகள்.

| தொ.இல | விடயம் | தரம் | நிலை | பெயர் |
| --- | --- | --- | --- | --- |
| 54. | பண்ணிசை | 1 | 1 | செல்வி.ம.துஷிதா. |
| 55. | | | 2 | செல்வன்.த.கார்த்தீபன். |
| 56. | | | 3 | செல்வி.பி.துஷ்யந்தினி. |
| 57. | | 2 | 1 | செல்வி.து.பிரதிகா. |
| 58. | | | 2 | செல்வன்.வி.சிந்துஜன். |
| 59. | | | 3 | செல்வி.வி.விதுர்சா. |
| 60. | | 3 | 1 | செல்வன்.து.மாலோகன். |
| 61. | | | 2 | செல்வன்.சி.சதீஸ்வரன். |
| 62. | | | 3 | செல்வன்.த.கோகுலன். |
| 63. | | 4 | 1 | செல்வி.த.அன்சுகா. |
| 64. | | | 2 | செல்வி.அ.அன்டோந்தினி. |
| 65. | | | 3 | செல்வி.ஸ்ரீ.மயூரப்பிரியா. |
| 66. | | 5 | 1 | செல்வி.ம.உஷாந்தி. |
| 67. | | | 2 | செல்வி.ந.அம்பிகா. |
| 68. | | | 3 | செல்வி.கி.வர்கனி. |
| 69. | சகலகலாவல்லிமாலை | 2 | 1 | செல்வி.து.பிரதிகா. |
| 70. | | | 2 | செல்வி.வி.விதுர்ஷா. |

| தொ.இல | விடயம் | தரம் | நிலை | பெயர் |
|---|---|---|---|---|
| 71. | | 3 | 1 | செல்வன்.து.மாலோகன். |
| 72. | | | 2 | செல்வன்.ந.பிரவீன். |
| 73. | | | 3 | செல்வி.ந.வைதேகி. |
| 74. | | 4 | 1 | செல்வி.க.கீர்த்தனா. |
| 75. | | | 2 | செல்வி.த.வர்ணிகா. |
| 76. | | | 3 | செல்வி.ஸ்ரீ.பிறேமினா. |
| 77. | | 5 | 1 | செல்வி.சௌ.கேமதட்சனி |
| 78. | | | 2 | செல்வி.லோ.சர்மினி. |
| 79. | | | 3 | செல்வி.த.பிரியந்தி. |
| 80. | | | 3 | செல்வி.செ.ஞானகௌரி. |
| 81. | தோரணம் கட்டுதல் | 1 | 1 | செல்வி.வி.ஜெயசுதா. |
| 82. | | | 2 | செல்வி.சி.ஜெனித்தா. |
| 83. | | | 3 | செல்வன்.க.துஷாந். |
| 84. | சரம் கட்டுதல் | 2 | 1 | செல்வி.ஜெ.நிவேதா. |
| 85. | | | 2 | செல்வன்.ஸ்ரீ.நிகேதனசர்மா |
| 86. | | | 3 | செல்வி.நே.வினிதா. |
| 87. | | 3 | 1 | செல்வி.ம.ஐஸ்வர்யா. |
| 88. | | | 2 | செல்வி.கு.வைதேகி. |
| 89. | | | 3 | செல்வன்.கு.வைகுந்தன். |

| | | | | |
|---|---|---|---|---|
| 90. | மாலைகட்டுதல் | 4 | 1 | செல்வன்.அனுஷ்ரன். |
| 91. | | | 2 | செல்வன்.ச.நித்திடவர்ணன். |
| 92. | | | 3 | செல்வன்.இ.திவிராஜ். |
| 93. | | 5 | 1 | செல்வி.ம.உஷாந்தி. |
| 94. | | | 2 | செல்வன்.சி.அருந்துஷைன். |
| 95. | | | 3 | செல்வன்.செ.செவ்வேள். |
| 96. | கோலம் போடுதல் | 4 | 1 | செல்வி.த.அன்சுகா. |
| 97. | | | 2 | செல்வன்.சி.நிருஷைன். |
| 98. | | | 3 | செல்வி.சி.நிஷாந்தி. |
| 99. | | 5 | 1 | செல்வி.பா.அனுஷியா. |
| 100. | | | 2 | செல்வி.த.பிரியந்தி. |
| 101. | | | 3 | செல்வன்.ந.லோஜிதன். |

## வலயமட்டப் போட்டிகள்

### தமிழ் மொழித்தினம்

| | | | |
|---|---|---|---|
| 102. | செல்வி.த.பிரியந்தி | பேச்சு | 1ம் இடம். |
| 103. | செல்வி.ம.உஷாந்தி | பாவோதல் | 2ம் இடம். |
| 104. | செல்வி.பா.சர்மிளா | இசையும் அசையும் | 2ம் இடம். |
| 105. | செல்வி.த.அன்சுகா | நடனம் | 2ம் இடம். |
| 106. | செல்வன்.ந.டினாளன் | கதைகூறுதல் | 3ம் இடம். |

### ஆங்கில தினம்.

| | | | |
|---|---|---|---|
| 107. | English Drama | Primary | 1st Place. |

**மாவட்ட மட்ட போட்டிகள்.**

| | | | |
|---|---|---|---|
| 108. | செல்வி.த.பிரியந்தி | பேச்சு | 3ம் இடம். |

சைவ பரிபாலனசபை.

| | | | |
|---|---|---|---|
| 109. | செல்வன்.த.கோகுலன் | தரம் 3 | வெண்கலப் பதக்கம் |

**தேசிய மட்டப் போட்டிகள்.**

| | | | |
|---|---|---|---|
| 110. | செல்வன்.த.கோகுலன் | Oral English | 100 marks. |
| 111. | செல்வன்.கை.பானுகோபிகன் | | சித்திரம். |

**தேசிய மட்டம் - புலமைப் பரிசில் பரீட்சை - 2003**

112. செல்வி.த.பிரியந்தி.
113. செல்வன்.சு.கிருஷாந்.
114. செல்வன்.ந.ஸோஜிதன்.
115. செல்வன்.சி.துவாரகன்.
116. செல்வன்.ர.ஐங்கரன்.
117. செல்வி.ம.உஷாந்தி.
118. செல்வி.செ.ஞானகௌரி.
119. செல்வி.ம.கலைமதி.
120. செல்வி.ஸோ.தேனுஷா.
121. செல்வன்.ம.டினாளன்.

**2003 இன் பாடசாலையின் சகல செயற்பாடுகளிலும் சிறந்த மாணவன்.**

செல்வன்.க.திஷாந்தன்.